**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 39/2015</u>

<u>CNR NO.TNTU090002732015</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம், குற்ற எண். 649/2012. |
| 2. | எதிரிகள் | 1. ஏகாம்பரம் த/பெ லட்சுமண நாடார்<br>2. ராஜேந்திரன் த/பெ கண்ணன்( **2ம் எதிரி இறந்து விட்டதால் அவர் மேல் உள்ள வழக்கு அற்று போய்விட்டது).**<br>3. டி.சரவணன் த/பெ எஸ்.ஆர்.திருவேங்கடம்<br>4. எம்.உதயகுமார் த/பெ முனுசாமி ராஜா<br>5. ஆர்.எம்.ஈஸ்வரன் த/பெ இராமகிருஷ்ணன் செட்டியார்<br>6. ஆர்.சுந்திரமூர்த்தி த/பெ ராமகிருஷ்ணன்<br>7. எம்.ரஜினி (எ) ரஜினிகாந்த் த/பெ முனிரத்தினம் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2). |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 22.10.2010 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 05.10.2012 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | AB |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 15.10.2015 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 23.04.2019 |

| | | |
|---|---|---|
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.01.04.2023 குவிமுச.பிரிவு 311–ன் கீழ் 4511/2022. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1–11.11.2019, 17.03.2015<br>அ.சா.2–11.11.2019, 24.04.2023<br>அ.சா.3–25.11.2019, 26.11.2019<br>அ.சா.4–25.11.2019<br>அ.சா.5–23.01.2020, 23.04.2025<br>அ.சா.6–23.01.2020, 11.05.2023<br>அ.சா.7–அ.சா.9–13.02.2020<br>அ.சா.10–21.01.2026<br>அ.சா.11–17.02.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 09.03.2026 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 01.04.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி கிராமிய காவல் நிலையம்.

எதிரிகள் : 1. ஏகாம்பரம் த/பெ லட்சுமண நாடார்
2. ராஜேந்திரன் த/பெ கண்ணன்( **2ம் எதிரி இறந்து விட்டதால் அவர் மேல் உள்ள வழக்கு அற்று போய்விட்டது**).
3. டி.சரவணன் த/பெ எஸ்.ஆர்.திருவேங்கடம்
4. எம்.உதயகுமார் த/பெ முனுசாமி ராஜா
5. ஆர்.எம்.ஈஸ்வரன் த/பெ இராமகிருஷ்ணன் செட்டியார்
6. ஆர்.சுந்திரமூர்த்தி த/பெ ராமகிருஷ்ணன்
7. எம்.ரஜினி (எ) ரஜினிகாந்த் த/பெ முனிரத்தினம்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2) .

**முடிவு** : இறுதியாக, அரசு தரப்பில் 1 மற்றும் 3 முதல் 7ம் எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2) குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து

எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. **(2ம் எதிரி இறந்து விட்டதால் அவர் மேல் உள்ள வழக்கு அற்றுபோய்விட்டது).**

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை/கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஏகாம்பரம் | லட்சுமண நாடார் | இந்து | டிரைவர் | காதர்பேட்டை, வாணியம்பாடி | 70 |
| 2 | டி.சரவணன் | எஸ்.ஆர்.திருவேங்கடம் | இந்து | டிரைவர் | கிரிசமுத்திரம், வாணியம்பாடி | 50 |
| 3 | எம்.உதயகுமார் | முனுசாமி ராஜா | இந்து | டிரைவர் | ஜனதாபுரம், வாணியம்பாடி | 60 |
| 4 | ஆர்.எம்.ஈஸ்வரன் | இராமகிருஷ்ணன் செட்டியார் | இந்து | டிரைவர் | ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி | 60 |
| 5 | ஆர்.சுந்திரமூர்த்தி | ராமகிருஷ்ணன் | இந்து | டிரைவர் | ஆம்பூர்பேட்டை, வாணியம்பாடி | 58 |
| 6 | எம்.ரஜினி (எ) ரஜினிகாந்த் | முனிரத்தினம் | இந்து | டிரைவர் | பெருமாள்பேட்டை, வாணியம்பாடி | 51 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 22.10.10 | 10.09.12 | AB | AB | 23.04.19 | 09.03.26 | 01.04.26 | – |

இவ்வழக்கானது 17.06.2015 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 09.03.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.உமர், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.C.தேவகுமார், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் வாணியம்பாடி லாரி உரிமையாளர்கள் சங்கத்திற்கு சொந்தமான இந்தியன் ஆயில் பங்கினை சாட்சி அண்ணாமலை மற்றும் சாட்சிகள் இரத்தினம், ராமகிருஷ்ணன், ஆகியோர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்ததாகவும், எதிரிகள் அனைவரும் சாட்சிகள் குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் பெட்ரோல் பங்கில் அத்துமீறி நூழைந்து பொருட்களை சேதப்படுத்தியதாகவும், மற்றும் பெட்ரோலை கொள்ளை அடித்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து வந்துள்ளதாகவும், கடந்த 22.10.2010ம் தேதி மாலை 05.00 மணிக்கு எதிரிகள் 1 முதல் 7 வரையிலானவர்கள் சட்ட விரோதமாக ஒன்று கூடி பயங்கரமான ஆயுதங்களுடன் செட்டியப்பனூர், கிருஷ்ணகிரி ரோட்டில் இருக்கும் வாணியம்பாடி லாரி உரிமையாளர்கள் சங்க பெட்ரோல் பங்கில் அத்துமீறி நுழைந்து அடித்து நாசம் செய்தும், மேற்படி பங்கில் வசூல் செய்து வைத்திருந்த பணம் ரூபாய் 1,27,000/-எதிரிகள் கொள்ளை அடித்தும் பின்பு எதிரிகள் பெட்ரோல் பங்கை தீ வைத்து கொளுத்தி விடுவோம் என்று மிரட்டியதாகவும், மேற்கண்ட செயலை தடுத்த சாட்சிகளை எதிரிகள் உங்களை உயிரோடு விடுவதில்லை என்றும், மேற்படி குற்ற சம்பவத்தின் தொடர்ச்சியாக எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பெட்ரோல் பங்கில் வியாபாரத்திற்கு வைத்திருந்த ரூ. 4,00,000/-மதிப்புள்ள பெட்ரோல் மற்றும் ரூபாய் 4,00,000/- மதிப்புள்ள டீசல் இவைகளை கொள்ளை அடித்து சென்றதாகவும், எனவே, 1 முதல் 7ம் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2) உ/இ 149 சட்டத்தின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச. பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2) சட்டத்தின் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. **இவ்வழக்கின் 2ம் எதிரி ராஜேந்திரன் கடந்த 06.12.2014ம் தேதி இறந்துவிட்டதால் அவர் மீது உள்ள வழக்கு அற்று போய்விட்டது.**

4. குற்றம்சாட்டப்பட்ட நபர்களுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி 1 ஏகாம்பரம், எதிரி 3 டி.சரவணன், எதிரி 4 எம்.உதயகுமார், எதிரி 5 ஆர்.எம்.ஈஸ்வரன், எதிரி 6 ஆர்.சுந்திரமூர்த்தி. எதிரி 7 எம்.ரஜினி (எ) ரஜினிகாந்த் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2) ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.11** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

6 (i) வாணியம்பாடி லாரி உரிமையாளர்கள் சங்கத்திற்கு சொந்தமான இந்தியன் ஆயில் பங்கினை சாட்சி அண்ணாமலை மற்றும் சாட்சிகள் இரத்தினம், ராமகிருஷ்ணன், ஆகியோர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்ததாகவும், கடந்த 22.10.2010ம் தேதி மாலை 05.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி சதி திட்டத்துடன் குற்ற எண்ணத்துடன் சாட்சியை செட்டியப்பனூர் கிராமம் கிருஷ்ணகிரி ரோட்டில் இருக்கும் பெட்ரோல் பங்க்கில் அத்துமீறி நுழைந்து தங்கள் கைகளில் கொண்டுவந்த தடிகளால் அடித்ததால் அங்கிருந்த கண்ணாடிப் பொருட்கள் மற்றும் மேசை நாற்காலிகள் சேதம் அடித்ததாகவும், மேற்படி பங்கில் வசூல் செய்து வைத்து இருந்த ரூ.1,27,000/−த்தை ஏகாம்பரம், சரவணன், ரஜினி (எ) ரஜினிகாந்த் ஆகியோர் கொள்ளை அடித்து சென்றுவிட்டதாகவும், பில் புத்தகங்களையும் கணக்குப் புத்தகங்களையும் பெட்ரோல் பங்க்கின் சாவிகளையும் இராஜேந்திரன், உதயகுமார் கொள்ளை அடித்து சென்றுவிட்டதாகவும், அங்கிருந்த சாட்சிகளையும், மற்றவர்களையும் பார்த்து பெட்ரோல் பங்க்கையே தீ வைத்து கொழுத்திவிடுவோம்

என்று ஈஸ்வரன், சுந்தரமூர்த்தி ஆகியோர் மிரட்டியதாகவும், மேற்படி எதிரிகளின் அராஜக செயலை தடுத்ததற்கு எங்களை உயிரோடு விடுவதில்லை என்று மிரட்டியதாகவும், எப்போது இருந்தாலும் உங்கள் சாவு எங்கள் கையில்தான் என்று மிரட்டியதாகவும், எதிரிகள் 4 ரவுடிகளையும் உடன் அழைத்து வந்து, அவர்கள் அனைவரும் ஆக்ரோஷத்துடனும் ஆவேசத்துடனும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு அடித்து துவம்சம் செய்ததால் எங்களால் தடுக்க இயலவில்லை என்றும், எங்களுக்கு மிகவும் பயம் ஏற்பட்டுவிட்டது என்றும், பெட்ரோல் பங்க்கில் இருந்த பெட்ரோல் கேன்களை வீசி நாசம் செய்ததாகவும், அங்கிருந்த பொருட்களை அடித்து துவம்சம் செய்தார்கள் என்றும், சுமார் ரூ.5,00,000/- மதிப்புள்ள பொருட்களை நாசம் செய்து விட்டதாகவும், வியாபாரத்திற்காக வைத்து இருந்த எச்.எஸ்.பி.5059 லிட்டர் கொண்ட ரூ.4,00,000/- மதிப்புள்ள பெட்ரோலையும், எம்.எஸ்.4074 லிட்டர் டீசலையும் (மதிப்பு ரூ.4,00,000/-) எடுத்துச் சென்றுவிட்டார்கள் என்றும், தடுத்த எங்களை உயிரோடு கொழுத்திவிடுவதாகவும், மயிரைக்கூட பிடுங்கமுடியாது என்று எதிரிகள் ஏகாம்பரம், சரவணன், ரஜினி (எ) ரஜினிகாந்த் ஆகியோர் மிரட்டியதாகவும், எங்களை வெட்டாமல் விடமாட்டோம் என்று எதிரிகள் ராஜேந்திரன் , உதயகுமார் ஆகியோர் மிரட்டியதாகவும், சம்பவம் குறித்து அன்றையதினமே மாலை 07.00 மணிக்கு வாணியம்பாடி நகர காவல் நிலையத்தில் சாட்சிகள் அண்ணாமலை, ரத்தினம் மற்றும் இராமகிருஷ்ணனும் புகார் கொடுத்ததாகவும், காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால், இதுசம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.O.P.No.25116/2010 தாக்கல் செய்ததாகவும், சென்னை உயர்நீதிமன்றம் 27.10.2010ம் தேதி உத்தரவின்படி மீண்டும் புகார் கொடுக்கவும், எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டதாகவும், மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற மனுவினை அ.சா.9 திரு.சம்பத், உதவி ஆய்வாளர் பெற்றுள்ளார்.

6 (ii) அ.சா.9 திரு.சம்பத், உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.1 புகார் மனுவை பெற்று அதற்கேற்ப நிலைய குற்ற எண் 649/2012 இ.த.ச பிரிவுகள் 147, 148, 427, 451, 380, 506(ii) சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர்

வழக்கு கோப்பை அ.சா.11 ராஜேந்திரன் காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததையடுத்து, அவர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.10.2012ம் தேதி 15.30 மணியளவில் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா.7 சங்கர், அ.சா.8 குணசேகரன் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

6(iii) சாட்சிகள் அ.சா.1 அண்ணாமலை, அ.சா.2 ராமகிருஷ்ணன், அ.சா.3 நடராஜன், பாண்டியன், அ.சா.4 மணி, அ.சா.5 ரத்தினம், அ.சா.6 சீனிவாசன் மற்றும் பார்வை மகசர் சாட்சிகள் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் 29.11.2012ம் தேதி மாலை 17.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவர்களை கைது செய்யவில்லை. எனவே, புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 147, 148, 329, 452, 506(2) படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார்கள். மேலும் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.**

8. இவ்வழக்கில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் வாணியம்பாடி லாரி உரிமையாளர்கள் சங்கத்திற்கு சொந்தமான இந்தியன் ஆயில் பங்கினை அ.சா.1 அண்ணாமலை, அ.சா.2 ராமகிருஷ்ணன், அ.சா.5 ரத்தினம் ஆகியோர் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்ததாகவும், எதிரிகள் அனைவரும் சாட்சிகள்

குத்தகைக்கு எடுத்து நடத்தி வரும் பெட்ரோல் பங்கில் அத்துமீறி நூழைந்து பொருட்களை சேதப்படுத்தியதாகவும், மற்றும் பெட்ரோலை கொள்ளை அடித்து செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்து வந்துள்ளதாகவும், கடந்த 22.10.2010ம் தேதி மாலை 05.00 மணிக்கு எதிரிகள் 1 முதல் 6 வரையிலானவர்கள் சட்ட விரோதமாக ஒன்று கூடி பயங்கரமான ஆயுதங்களுடன் செட்டியப்பனூர், கிருஷ்ணகிரி ரோட்டில் இருக்கும் வாணியம்பாடி லாரி உரிமையாளர்கள் சங்க பெட்ரோல் பங்கில் அத்துமீறி நுழைந்து அடித்து நாசம் செய்தும், மேற்படி பங்கில் வசூல் செய்து வைத்திருந்த பணம் ரூபாய் 1,27,000/–எதிரிகள் கொள்ளை அடித்தும் பின்பு எதிரிகள் பெட்ரோல் பங்கை தீ வைத்து கொலுத்தி விடுவோம் என்று மிரட்டியதாகவும், மேற்கண்ட செயலை தடுத்த சாட்சிகளை எதிரிகள் உங்களை உயிரோடு விடுவதில்லை என்றும், எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பெட்ரோல் பங்கில் வியாபாரத்திற்கு வைத்திருந்த ரூ. 4,00,000/–மதிப்புள்ள பெட்ரோல் மற்றும் ரூபாய் 4,00,000/– மதிப்புள்ள டீசல் இவைகளை கொள்ளை அடித்து சென்றதாக எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

**9. எதிரிகள்தான் இந்த தாக்குதலை நடத்தினார்களா என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?**

**9 (i).** மேற்கண்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒன்றிணைந்து பரிசீலனை செய்கையில், எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டு சதி திட்டம் தீட்டி பெட்ரோல் பங்கின் உள்ளே நுழைந்ததாகவும், அங்கிருந்து ரூ.1,27,000/–ஐ ஏகாம்பரம், சரவணன் மற்றும் ரஜினி (எ) ரஜினிகாந்த் ஆகியோர் கொள்ளையடித்து சென்றுவிட்டதாகவும், பில் புத்தகங்களையும், கணக்கு பெட்ரோல் பங்கின் சாவிகளையும் ரஜேந்திரன் உதயகுமார் எடுத்து சென்றுவிட்டதாகவும், அப்போது எதிரிகள் ஆவேசமாக அசிங்கமாக திட்டினார்கள், உங்களையெல்லாம் உயிருடன் விடுவதில்லை என கூறினார்கள், எப்போது இருந்தாலும் எங்கள் கையில் தான் உங்களுக்கு சாவு என்று ஆக்ரோசமாக கூறிச்சென்றதாகவும், பெட்ரோல் பங்கில் இருந்த முக்கியமான பைல்களையும், மேற்படி எதிரிகள் எடுத்து சென்று விட்டதாகவும், எதிரிகளுடன் ரவுடிகளும் வந்திருந்தார்கள் என்றும், பெட்ரோல்பங்கில் இருந்த பொருட்களையும், பெட்ரோல் கேன்களையும் உடைத்து நாசம் செய்துவிட்டதாகவும்,

ரூ.5,00,000/- மதிப்புள்ள பொருட்களை நாசம் செய்ததாகவும், HSD 5059 லிட்டர் மதிப்பு சுமார் ரூ.4,00,000/- மதிப்புள்ள பெட்ரோலையும், சுமார் ரூ.4,00,000/- மதிப்புள்ள MS 4074 லிட்டர் டீசலையும் கொள்ளையடித்து சென்றுவிட்டதாகவும், உயிரோடு கொழுத்தி விடுவதாகவும், எங்களை ஒன்றும் செய்யமுடியாது என்றும், மயிரை கூட புடுங்க முடியாது என்று ஆணித்தனமாகவும் ஆத்திரமாகவும் ஆவேசமாகவும் வெட்டாமல் விடுவதில்லை என கூறிச்சென்றதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் சாட்சிகளின் சாட்சியங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது புகார்தாரரான அ.சா.1 அண்ணாமலை அவரது நீதிமன்ற சாட்சியத்தில் 22.10.2010ம் தேதி பொதுக்குழு கூட்டம் நடந்ததாகவும், அப்போது தகராறு ஏற்பட்டதாகவும், மாலை 05.00 மணிக்கு எதிரிகள் நான்கைந்து ரவுடிகளை வரவழைத்து தகராறு செய்தும், ரஜினி, உதயகுமார், சரவணன், ஏகாம்பரம் ஆகியோர் ரூ.1,27,000/-ஐ எடுத்துச்சென்றதாகவும், பீரோ சாவியை ரஜினி, உதயகுமார் எடுத்துச்சென்றதாகவும், அதை கேட்டபோது சுந்தரமூர்த்தி, ஈஸ்வரன் ஆகிய இரு எதிரிகளும் அ.சா.1ஐயும், ரத்தினம் மற்றும் ராமகிருஷ்ணனை உயிரோடு கொழுத்தி விடுவதாகவும், யாரும் எங்களை மயிரை கூட பிடுங்க முடியாது என்றும், என்றைக்கு இருந்தாலும் பெட்ரோல் பங்கிலேயே வைத்து கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகவும், எதிரிகள் அடித்ததையும், மிரட்டியதையும் நாங்கள் வெளியில் சொல்லவில்லை என்றும், ஆயில், பெட்ரோல், டீசல் ஆகியவற்றை எதிரிகள் அனைவரும் கைப்பற்றி கொண்டதாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது புகார் கொடுத்ததற்கான நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீண்ட நாட்களாகிவிட்டதால் தற்போது நியாபகம் இல்லை என்றும், சம்பவத்தில் பெட்ரோல் பங்க் அடித்து உடைக்கப்பட்டதற்கான சேதாரங்கள் ஏதேனும் குறித்த ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை என்றும், எதிரிகள் சம்பவத்தின்போது நான்கைந்து ரவுடிகள் அழைத்து வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரிகள் கணக்கு புத்தகங்களை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல என்றும், எதிரிகள் சங்கத்தின் ரூ.1,27,000/- பணத்தை கொள்ளையடித்துச்சென்றுவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில்

அ.சா.ஆ.1 ஆன புகார் மனுவை பரிசீலனை செய்து பார்க்கும்போது ரூ.1,27,000/– பணத்தை ஏகாம்பரம், சரவணன், ரஜினி (எ) ரஜினிகாந்த் எடுத்து சென்றதாக புகாரளித்துள்ள நிலையில் அவரது நீதிமன்ற சாட்சியத்தில் ஏகாம்பரம், சரவணன், ரஜினி (எ) ரஜினிகாந்த் மற்றும் உதயகுமார் ஆகியோர் எடுத்து சென்றதாக நான்காம் எதிரியை சேர்த்து சாட்சியமளித்துள்ள நிலையில் உண்மையிலேயே ரூ.1,27,000/– பணத்தை யார் யார் எடுத்துச்சென்றார்கள் என சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், பீரோ சாவியையும், அங்கிருந்த கணக்கு புத்தகங்களையும் ரஜினி, உதயகுமார் எடுத்துச்சென்றதாகவும், அதை கேட்டபோது ஈஸ்வரன், சுந்தரமூர்த்தி ஆகிய இருவரும், மற்ற எதிரிகளும் என்னையும், ரத்தினம் மற்றும் ராமகிருஷ்ணனை உயிரோடு கொளுத்தி விடுவதாக மிரட்டியதாகவும், என்றைக்கு இருந்தாலும் பெட்ரோல் பங்கிலேயே கொலை செய்துவிடுவதாகவும், அங்கிருந்து ஓடி வந்துவிட்டதாகவும், எதிரிகள் அடித்ததையும், மிரட்டியதையும் நாங்கள் வெளியில் சொல்லவில்லை என்றும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது எதிரிகள் கணக்கு புத்தகங்களை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல என்றும், எதிரிகள் சங்கத்தின் ரூ.1,27,000 பணத்தை கொள்ளை அடித்து சென்றுவிட்டார்கள் என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.ஆ.1 ல் உள்ள சங்கதிகளுக்கு முரணாகவும், புதிய சங்கதிகளை குறிப்பிட்டும் சாட்சியமளித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9 (ii).**கண்ணுற்ற சாட்சியான அ.சா.2இராமகிருஷ்ணன் என்பவரின் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் 2.10.2010ம் தேதி பொதுக்குழு HB Houseல் கூட்டப்பட்டதாகவும், அந்த நேரத்தில் 2, 4, 5, 6, 7ம் எதிரிகள் ஒன்று சேர்ந்து என்னையும், அ.சா..1யும் அடித்து வெளியே துரத்திவிட்டதாகவும், 5 மந்றும் 6 எதிரிகள் அடிக்க பாய்ந்து வந்தார்கள் என்றும், அதனால் அ.சா.1 நான், வேணு நாயுடு, நடராஜன் ஆகியோர் பெட்ரோல் பங்கிடம் சென்றதாகவும், அங்கு வந்து நான்கு, மூன்று, ஏழு எதிரிகள் ரூ.1,27,000ஐ எடுத்து சென்றதாகவும், நாலாயிரம் லிட்டர் பெட்ரோல், ஐந்தாயிரம் லிட்டல் டீசல் அபகரித்து சென்றதாகவும், 6ம் எதிரி மேசை 20 அடி உயர கண்ணாடியை எட்டி உதைத்ததாகவும், 6, 5, 7 எதிரிகள் ஏய் தேவடியா பசங்களே

என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாகவும் சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.ஆ.1ஐ பரிசீலனை செய்து பார்த்தபோது, 6ம் எதிரி மேசை 20 அடி உயர கண்ணாடியை எட்டி உதைத்ததாகவோ, 6, 5, 7 எதிரிகள் ஏய் தேவடியா பசங்களே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டியதாகவோ குறிப்பிட்டு புகாரளிக்காத நிலையில் அ.சா.2, அ.சா.ஆ.1ல் இல்லாத புதிய சங்கதிகளை குறிப்பிட்டு அ.சா.ஆ.1ற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9 (iii).** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 நடராஜன் என்பவரின் நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது HB கல்யாண மண்டபத்தில் சரவணன், ஏகாம்பரம், சுந்தரமூர்த்தி வரவில்லை என்றும், எதிரி ரஜினிகாந்த் அவராகவே எழுதி கையெழுத்து போடச்சொன்னார், போட்டேன் என்றும், எதிரி ஏகாம்பரம் சங்கத்திற்கு சொந்தமான பெட்ரோல் பங்கிற்கு சென்று அதை கையகப்படுத்தி கொண்டார் என்றும், அங்கிருந்த ஊழியர்களை அனுப்பிவிட்டார் என்றும், அன்றைய தினம் பொதுக்குழுவில் சுந்தரமூர்த்தி, ஈஸ்வரன் மற்றும் அடையாளம் தெரியாத நபர்கள் விரட்டியடித்துவிட்டனர் என்றும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது முதன்மை விசாரணையில் கூறிய விவரங்களை போலிசார் சொல்லியதின் அடிப்படையில் தன் சொன்னேன் என்றும், சம்பவத்தின்போது எதிரிகள் யாரையும் நான் சம்பவயிடத்தில் பார்க்கவில்லை என்றும், உதயகுமார் என்பவர் லாரி அசோசியேசனில் உறுப்பினர் இல்லை என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.3 ன் சாட்சியமானது இவ்வழக்கிற்கு சாதகமாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9 (iv).** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 மணி என்பவரின் சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்க்கும்போது 02.10.2010ம் தேதி பொதுக்குழு கூட்டம் நடந்ததாகவோ, அப்போது சங்கத்தின் கணக்கு வழக்குகளை தலைவர், செயலாளர் ஒப்படைக்கும்போது சரவணன், ரஜினிகாந்த், சுந்தரமூர்த்தி, ஈஸ்வரன் இன்னும் நான்கைந்து நபர்களுக்கிடையே கூச்சல் குழப்பம் அதிகமாக இருந்ததாகவும், அதனால் பாதியிலேயே எழுந்து சென்றுவிட்டதாகவும், வாணியம்பாடியில் சொந்த வேலையை

முடித்து செல்லும்போது பெட்ரோல் பங்கில் கூட்டம் அதிகமாக இருந்ததால் சென்று பார்த்ததாகவும், சண்டை சம்மந்தமாக உடைந்திருந்ததாகவும், அதை யார் செய்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றும், அப்போது நான் அங்கு இல்லை என்றும், அந்த பங்கில் அண்ணாமலை, ரத்தினம் மற்றும் மற்றொரு நபர் இருந்தார்கள் என்றும் கூச்சல் சம்மந்தமாக விசாரித்தபோது பங்கை உடைத்துவிட்டு சுந்தரமூர்த்தி, விஜயகுமார், சரவணன் மற்றும் ஒரு நபர் பணத்தை எடுத்து சென்றுவிட்டதாக சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.ஆ.1 ல் மேற்படி பணத்தை ஏகாம்பரம், சரவணன், ரஜினிகாந்த் ஆகியோர் எடுத்துச்சென்றதாக புகாரளித்துள்ள நிலையில் அ.சா..4ன் சாட்சியத்தில் சுந்தரமூர்த்தி, விஜயகுமார், சரவணன் மற்றும் ஒரு நபர் பணத்தை எடுத்து சென்றுவிட்டதாக சாட்சியமளித்து உண்மையிலேயே அங்கிருந்த பணத்தை யார் எடுத்து சென்றார்கள் என்ற சந்தேகத்தை மேலும் நீதிமன்றத்திற்கு ஏற்படுத்துவதாலும் சம்பவம் குறித்து பார்க்கவில்லை என்றும், அப்போது அ.சா.4 அங்க இல்லை என்பதாலும், அ.சா.4ன் சாட்சியமானது அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (v). மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 ரத்தினம் என்பவரின் நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்து பார்த்தபோது காதர்பேட்டையில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றதாகவும், அப்போது சண்டை ஏற்பட்டது என்றும், அதனால் மாலை 05.00 மணிக்கு எதிரிகள் அனைவரும் கூட்டமாக வந்து பெட்ரோல் பங்கை நடத்தி வந்த அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ தேவிடியா பையா தொம்ம பையா என்று அசிங்கமாக பேசி கொலை செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டியதாகவும், பெட்ரோல் பங்கிற்கு நெருப்பு வைத்துவிடுவேன் என மிரட்டியதாகவும், பெட்ரோல் பங்கில் இருந்த டேபிள், சேர், கண்ணாடியை உடைத்ததாகவோ, கணக்கு வழக்கு புத்தகங்கள் மற்றும் பணம் ரூ.75,000ஐ எடுத்துக்கொண்டு பெட்ரோல் பங்கில் இருந்த பெட்ரோல் மற்றும் டீசல் அளவை எடுத்துக்கொண்டு பெட்ரோல் பங்கை பூட்டி விட்டார்கள் என்றும், எனக்கும் அண்ணாமலைக்கும் இவ்வழக்கில் காயம் ஏற்பட்டதாகவும், எனக்கு தோள்பட்டையில் உள்காயம் ஏற்பட்டதாகவும், அ.சா.1க்கு வலதுகையில் வீக்கம் ஏற்பட்டதாகவும்,

கொன்று விடுவோம் என்று சொன்னதால் அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் வாணியம்பாடியிலுள்ள அஜீம் மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்று வந்துவிட்டோம் என்று சாட்சியமளித்துள்ள நிலையில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது அ.சா.1 மற்றும் அ.சா.2ம் கூறியுள்ளதைபோல பிரச்சனை எதுவும் நடக்கவில்லை என்றும், நானும், அ.சா.1ம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டோம் என்று கூறியிருப்பது தவறு என்றால் சரிதான் என்றும், பெட்ரோல் பங்கை அடித்து உடைத்துவிட்டார்கள் என்றும், பெட்ரோலை திருடிக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும் கூறியிருப்பது தவறு என்றால் சரிதான் என்றும், சம்பவ தேதியில் குற்றச்சாட்டில் கூறியுள்ளபடி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரிதான் என்றும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சாட்சியமளித்திருப்பதால் அ.சா.5ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு வலு சேர்க்கும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9 (vi).** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 சீனிவாசன் என்பவரின் நீதிமன்ற சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் 21.10.2010ம் தேதி HB House திருமண மண்டபத்தில் பொது குழு கூட்டத்தில் மதியம் வரை இருந்ததாகவும், பிறகு பெட்ரோல் பங்கிற்கு வந்துவிட்டதாகவும், அன்றையதினம் 04.00 மணியிலிருந்து 05.00 மணிக்கு போன் செய்து என்னை HB House திருமண மண்டபத்திற்கு வரச்சொன்னார்கள் என்றும், அங்கு பொதுக்குழுவில் புதிய நிர்வாகிகளை தேர்வு செய்ததாகவும், இனிமேல் பெட்ரோல் பங்கில் வேலை செய்வதும், வேலை செய்யாததும் என்னுடைய விருப்பம் என்று தெரிவித்ததாகவும், பின் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும், மறுநாள் பெட்ரோல் பங்கிற்கு வந்தபோது பெட்ரோல் பங்கில் எந்த சேதாரமும் நடைபெறவில்லை என்றும், புதிய நிர்வாகிகள் பெட்ரோல் பங்கை நடத்தி வந்ததாகவும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது நான் HB House திருமண மண்டபத்திலிருந்தவரை எந்த விதமான தகராறும் நடக்கவில்லை என்றும், பெட்ரோல் பங்க் சூறையாடி சேதப்படுத்தப்படவில்லை என்றும், நான் பெட்ரோல் பங்கிற்கு மறுநாள் வந்தபோது பெட்ரோல் பங்க் எந்த சேதாரமும் இல்லாமல் இருந்தது என்றும், பெட்ரோல் பங்கில் பெட்ரோல் மற்றும் கணக்கு வழக்கு புத்தகங்கள் திருடுபோகவில்லை என்றும்,

கண்ணாடிகள் எதுவும் உடைக்கப்படவில்லை என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில் அ.சா.6ன் சாட்சியம் இவ்வழக்கிற்கு வலு சேர்க்கும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9 (vii).** பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.7 சங்கர் அவரது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என்றும், மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.8 குணசேகரன் அவரது சாட்சியத்தில் கையெழுத்தை எதற்காக செய்தேன் என தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ள நிலையில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.7 முதல் அ.சா.8 ஆகியோரின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. அ.சா.9 சம்பத், உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடியில் இருந்து வரப்பெற்ற மனுவின் அடிப்படையில் அ.சா.ஆ.1 புகார் மனுவினைப் பெற்று அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் வழக்கு கோப்பை அ.சா.11 ராஜேந்திரன் காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகள் முன்பிணை பெற்றதால் கைது செய்யவில்லை என்றும், புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்ததை குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

11. **“Rohtas and others Vs State of Haryana 2021 ”** என்ற உச்ச நீதிமன்ற தீர்ப்பில் சாட்சிகள் புகாரில் இல்லாத புதிய உண்மைகளை சேர்த்து (Material Improvements) வழக்கின் தன்மையையே மாற்ற முயன்றால் அத்தகைய சாட்சியங்களை நீதிமன்றம் ஏற்க கூடாது இது குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று

கூறியுள்ள நிலையில், இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2, அ.சா.5 ஆகிய சாட்சிகள் புகாரில் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகளுக்கு மாறாக பல புதிய தகவல்களை புகுத்தியுள்ளார்கள். மேலும், புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடாத ஆபாசமான வார்த்தைகளை வார்த்தைகள் சிலவற்றை மிகைப்படுத்தி கூறியுள்ளதாலும், அ.சா.1 மற்றும் அ.சா.2 ற்கு சம்பவத்தின்போது காயம் ஏற்பட்டதாகவோ, அதனால் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும் அ.சா.ஆ.1ல் இல்லாத புதிய சங்கதிகளை குறிப்பிட்டு கூறியுள்ள நிலையில் காயச்சான்று எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கில் பணம் மற்றும் பெட்ரோல், டீசல், பெட்ரோல் பங்கின் கணக்கு புத்தகங்கள் கொள்ளையடிக்கப்பட்டதாக கூறியுள்ள நிலையில் அதை நிரூபிக்கும்பொருட்டு கைப்பற்றுதல் மகசரோ, படிவம் 91 நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், இவ்வழக்கின் உண்மை தன்மையை சந்தேகத்திற்கு உள்ளாக்குகிறது.

**12. “Vadivelu devar Vs. State of Madras இவ்வழக்கின் படி சாட்சிகள் Wholly reliable, Wholly unreliable, neither wholly reliable nor wholly unrelaibale” என மூன்று விதமாக பிரித்து கையாளப்படுகிறது.**புகார்தாரர் தரப்பு தனது வழக்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறிவிட்டது எனவும், நீதிமன்ற சாட்சியத்தின் போது சாட்சிகள் அளித்த சாட்சியங்களில் முரண்பாடு ஏற்பட்டதாலும் புதிய சங்கதியை உருவாக்கி கூறியதாலும், **புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் முரண்பட்ட வாக்குமூலங்கள் வழக்கின் தன்மையை பாதிப்பதாகவும் புகார்தரப்பு சாட்சிகள் முழுக்க நம்பதகாதவர்களாகவே “Wholly unreliable** " இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>13. நீதிமன்றத்தின் முடிவு</u>**

**“In dubio pro reo” சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் எதிரிக்கே வழங்க வேண்டும் என்பது சட்ட பழமொழி ,**

இவ்வழக்கில் 1 மற்றும் 3 முதல் 7 எதிரிகளின் மீது 147, 148, 392, 452, 506(2) இதச பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில்,

1 மற்றும் 3 முதல் 7 எதிரிகளுக்கு எதிராக புகார்தாரர் தரப்பு சாட்சிகள் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று மேற்கண்ட புகார்தாரர் பிரச்சணைக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

18. **<u>முடிவாக,</u>** இவ்வழக்கின் 1 மற்றும் 3 முதல் 7 எதிரிகள் மீதான 147, 148, 392, 452, 506(2) இதச ன் கீழான குற்றத்தை பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து 1 மற்றும் 3 முதல் 7 எதிரிகளை கு.வி.மு.ச. 248(1) ன்படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. ( **2ம் எதிரி இறந்து விட்டதால் அவர் மேல் உள்ள வழக்கு அற்று போய்விட்டது).**

15. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. 1 மற்றும் 3 முதல் 7 எதிரிகள் கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு.அண்ணாமலை |
| 2 | அ.சா.2 | திரு.ராமகிருஷ்ணன் |
| 3 | அ.சா.3 | திரு.நடராஜன் |
| 4 | அ.சா.4 | திரு.மணி |
| 5 | அ.சா.5 | திரு.ரத்தினம் |
| 6 | அ.சா.6 | திரு.சீனிவாசன் |

| | | |
|---|---|---|
| 7 | அ.சா.7 | திரு.சங்கர் |
| 8 | அ.சா.8 | திரு.குணசேகரன் |
| 9 | அ.சா.9 | திரு.சம்பத், உதவி ஆய்வாளர். |
| 10 | அ.சா.10 | திரு.சிவலிங்கம், காவல் ஆய்வாளர். |
| 11 | அ.சா.11 | திரு.ராஜேந்திரன், காவல் ஆய்வாளர். |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 10.09.2012ஆம் தேதியிட்ட புகார்மனு. |
| 2. | அ.சா.ஆ.2 | 05.10.2012ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை. |
| 3. | அ.சா.ஆ.3 | 05.10.2012ஆம் தேதியிட்ட பார்வை மகசர். |
| 4. | அ.சா.ஆ.4 | 05.10.2012ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம். |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.